This Question Paper consists of 31 questions 8 printed pages.
8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

Roll No. / பதிவு எண்: | | | | | | | | | | | | |

**Code No.** குறியீடு எண்: **59/S/O/TM**

**Set /** செட் **A**

# TAMIL
# (தமிழ்)
# (237)

Day and Date of Examination (தேர்வு நாள்) : ..........................................................

Signature of Invigilators (தேர்வு மேற்பார்வையாளர்களின் கையொப்பங்கள்) :
1. ..........................................................
2. ..........................................................

**பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களுக்கும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் எண்ணை குறியீடு எண்: 59/S/O/TM செட் A விடைத்தாளில் எழுதவும்.

# TAMIL
# (தமிழ்)
# (210)

கால அளவு : 3 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**பொதுக் குறிப்புகள் :** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

**குறிப்பு:** 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

2. விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக : $1 \times 11 = 11$

**1.** பிறர் தர வாரதாவை என்று புறநானூறு கூறுவது

(அ) கல்வியும் செல்வமும்

(ஆ) தீதும் நன்றும்

(இ) கலையும் பண்பும்

(ஈ) வீரமும் வெற்றியும்

**2.** உயிரோடு எப்போதும் கூடி நிற்கும் செல்வம்

(அ) கல்வி

(ஆ) கேள்வி

(இ) அழகு

(ஈ) செல்வம்

**3.** கறுத்த என்ற சொல்லின் பொருள்

(அ) அன்பு

(ஆ) அறிவு

(இ) கோபம்

(ஈ) வெறுப்பு

**4.** தமிழ்ச் சமூகத்தின் விளைச்சலுக்குத் தமிழ் எவ்வாறு பயன்படுகின்றது என்று பாரதிதாசன் கூறுகின்றர்?

(அ) நீரைப்போல்

(ஆ) காற்றைப்போல்

(இ) உரத்தைப் போல்

(ஈ) பச்சையத்தைப் போல்

**5.** உறுதியான அணைகளையும் உருக்குலைப்பது எது?

(அ) காட்டு மரங்கள்

(ஆ) காட்டு விலங்குகள்

(இ) மனிதர்கள்

(ஈ) காட்டு வேர்கள்

**6.** கரிய செம்மல்

(அ) தசரதன்

(ஆ) இராமன்

(இ) வசிட்டர்

(ஈ) இலக்குவன்

**7.** சந்திரகுப்தன் அரசவைக்கு வந்த கிரேக்க தூதர் ________

(அ) அரிஸ்டாட்டில்

(ஆ) மெகஸ்தனிஸ்

(இ) எச.வி. வெல்ஸ்

(ஈ) இராபர்ட்

**8.** கணினி கணக்கியல் மற்றும் ________ செயல்களைத் தீர்க்கும்.

(அ) மின்னணுவியல்

(ஆ) தோராயமான

(இ) தர்க்கவியல்

(ஈ) சிந்தனை

**9.** சண்டகாசுரனின் தேரில் உள்ள கொடி இற்று விழுந்த இடம்

(அ) வெற்றியூர்

(ஆ) தேவகோட்டை

(இ) தண்ட தேவி

(ஈ) மாளக கண்டான்

**10.** இரண்டாம் வேற்றுமை

(அ) முருகனது வீடு

(ஆ) மலையின் வீழருவி

(இ) மண்ணால் பானை வனைந்தான்

(ஈ) வீட்டைக் கட்டினான்

**11.** அடுக்குத் தொடர்

(அ) கல கல

(ஆ) வா! வா! வா!

(இ) இரவு பகல்

(ஈ) படபட

**12.** கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி :

புலவர் பெருமக்களின் கூட்டுறவாலும் இன்தமிழ் இலக்கியங்களைக் கேட்டு மனம் பண்பட்டதாலும் இயற்கையாகவே எழுந்த தமிழ்ப் பற்றாலும் உந்தப்பட்ட சீதக்காதி புதிய இலக்கியங்களைப் புனையச் செய்து தமிழ்த்தாய்க்குச் சமர்ப்பித்து மகிழவேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். அன்றிருந்த தமிழ் இலக்கியங்கள் எல்லாம் பெரிதும் புராணங்களாகவும் ஒரு சமயச் சார்புடையனவாகவுமே இருந்தன. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லீம்கள் அப் புராணங்களின் கவிதைச்சுவையில் ஈடுபாடு கொண்டாலும் கதைப் போக்கை ஒப்புவது இயலாது போயிற்று. முஸ்லிம்களின் சரித்திரங்களும் சமயக் கருத்துகளும் அரபு மொழியிலேயே இருந்தமையால் அம்மொழி அறியாத தமிழ் முஸ்லிம்கள், தம் சமயத்தைப் பற்றியோ சமாயாச்சாரியார் பற்றியோ அறிந்து கொள்ள முடியாமல் போயிற்று. அதனால் அனுஷ்டானங்களின் நியமம் தவற ஆரம்பித்தது. நுண்ணறிவும் விரிந்த அனுபவமும் உள்ள சீதக்காதி தமிழில் இஸ்லாமியச் சட்டங்களின் கருத்துகள் இயற்றப்பட்டால் ஒழியக் கழுவாய் இல்லையெனக் கண்டார். அத்துடன் இஸ்லாமிய எழில் நலங்களைத் தமிழுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வமும் அவருக்கு இருந்தது.

**வினாக்கள் :**

1. தமிழ் முஸ்லிம்கள் ஏன் புராணக் கதைகளின் போக்கை ஒப்பவில்லை? 3
2. தமிழ் முஸ்லீம்களின் அனுஷ்டானங்களின் நியமம் தவறக் காரணம் என்ன? 2
3. சீதக்காதி புதிய இலக்கியங்களைப் புனைய விரும்பியதன் காரணம் என்ன? 3
4. இசுலாமிய எழில் நலங்களைத் தமிழுக்குக் கொண்டு வர விரும்பியவர் யார்? ஏன் விரும்பினார்? 3

**13.** பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க :

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்

**வினாக்கள் :**

1. தமிழ் மொழியில் எதனைப் பெயர்த்தல் வேண்டும்? 2
2. எம்மொழியில் எவற்றை இயற்றல் வேண்டும்? 1
3. எதில் மகிமை இல்லை? 1
4. வெளிநாட்டார் எதனை வணக்கஞ் செய்வர்? 2

**14.** தலைவன் வண்டைப் பார்த்து என்ன கேட்டதாக குறுந்தொகைப் பாடல் கூறு கிறது? 1

**15.** தமிழுக்கு என்னென்ன பெயர்களுண்டு என்று பாவேந்தர் குறிப்பிடுகின்றார்? 1

**16.** வெள்ளைச்சாமிக்கு குடிக்கப் பணம் எப்படி கிடைத்தது? 1

**17.** அசோகன் வாழ்வில் ஏற்பட்ட திருப்பம் யாது? 1

**18.** தமிழில் மொழி பெயர்க்க : 2

(அ) Credit

(ஆ) Hazard

**19.** அ. சேர்த்து எழுதுக : 4×½=2

*(i)* வைக்கற்+பாற்று+அன்று

*(ii)* ஆறு+சுவை

*(iii)* பெருமை+செல்வம்

*(iv)* செம்மை+தமிழ்+நாடு

ஆ. கூறியவாறு செய்க : 2

1. மாணவர்கள் சிரித்தனர். (பொருத்தமான இரட்டைக்கிளவி சேர்க்க)
2. இராமனால் சிலை செதுக்கப்பட்டது (வேற்றுமை உருபை எடுத்து எழுதுக)

இ. கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக : 2

1. சுத்தம் சுகம் தரும் _______ கேடு தரும்.
2. மேதினியில் இட்டார் பெரியோர்; _______ இழிகுலத்தோர்.

ஈ. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக : 2

1. வெருவி
2. மடுவு
3. தெற்ற
4. பரிதி

**20.** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க : 2

1. தட்டிக் கழித்தல்
2. பொடி வைத்தல்

**21.** உலக மக்கள் தொகை நாள் எது? 1

**22.** 'ஊடகங்களின் தலையாய கடமை' என்னும் தலைப்பில் ஒரு குறிப்புரை எழுதுக. 4

**23.** வேற்றுமையைப் போக்கும் வழியிணைப் பூங்குன்றனார் வழி விளக்குக. 5

**24.** 'தூய்மை இந்தியா' திட்டம் குறித்து அரசு தரும் குறித்த அறிவிப்பினை எழுதுக. 5

அல்லது

கல்வி உரிமைச் சட்டம் பற்றி கல்வி இயக்கம் தரும் விளம்பரத்தினை எழுதுக.

**25.** அ. இரை - இறை பொருள் வேறுபாடு கூறி அவற்றை தொடரில் அமைத்து எழுதுக. 2

ஆ. அகவுதல்-கரைதல் எப்பறவைகளுக்குரிய ஒலிகள் என்பதைக் குறிப்பிடுக. 2

**26.** நகரப் பேருந்து நிலையத் தகவல் பலகையில் இடம்பெறும் தகவல்கள் குறித்த அட்டவணை தயாரிக்க. 5

அல்லது

உமது பெயர் கோவிந்தன்/இராதை என்றும் உமது வங்கிக் கணக்கெண் 2087654 என்னும் கொண்டு ரூ. 10,000-ஐ 8.12.2018 அன்று வங்கியில் இருந்து எடுப்பதற்கு ஏதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்க. உமது முகவரி 58, அம்மன் கோவில் தெரு, குருவிகுளம். என்று கொள்க.

ATM மனுச் செய்து விட்டீர்களா

பாரத ஸ்டேட் பாங்கு

சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம்

நாள் :..........................

கணக்கெண் : .....................

எனக்கு மட்டும் (எழுத்தால் எழுதுக) ..................................................................

............................................................... ரூபாய் வழங்கவும்.

| ரூ. |
|---|

அடையாள வில்லை எண் : .........................

பட்டியல் எண் : .........................................

பணம் வழங்குக

அனுமதிக்கும் அதிகாரி

கணக்கு வைத்திருப்பவர் பெயர் :

முகவரி : ...............................

.................................................

தொலைபேசி எண் : ..................

கணக்கு வைத்திருப்பவர் பெயர் : ............................

கையொப்பம் :...............................

**27.** அசோகனின் ஆட்சி சிறப்பை விவரிக்கவும். 5

அல்லது

மொட்டை மரம் என்ற சிறுகதையில் வரும் இரண்டு பாத்திரங்களை விளக்குக.

**28.** பிழை திருத்தம் செய்க : 5

1. காலத்தே பயர் செய்.
2. குதிறை சுத்தியது.
3. கூறை முனைந்தான்.
4. நான் நெற்று கொவிலுக்கு செல்வேன்.
5. படகில் சவாறி செய்தேண்.

**29.** தலைக்கவசம் அணிய வேண்டியதன் அவசியத்தை அறிவுறுத்தி நண்பனுக்குக் கடிதம் எழுதுக. 7

அல்லது

நீவிர் வாழும் பகுதியில் கழிவுநீர் மூலம் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி மாநகராட்சிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**30.** ஏதேனும் ஒன்றுக்கு நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக : 5

(அ) ஒழுக்கம் விழுப்பம் தரும்

(ஆ) கற்றது கை மண் அளவு

(இ) உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

**31.** ஏதேனும் ஒன்றுக்கு இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக: 10

(அ) மாணவரும் சமூகத் தொண்டும்

(ஆ) அறிவியலின் தாக்கம்

(இ) கல்விக் கண் திறந்த தலைவர்

★ ★ ★